# விருத்தாசலம் நகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திரு. சி. பாண்டு.,

ந.க.எண். 508 /2019/எப்1, நாள் : 28.11 .2019.

<u>பொருள் :</u> மனைப்பிரிவு – விருத்தாசலம் நகராட்சி – விருத்தாசலம் கிராமம் ரீசர்வே எண். 308/1pt, 397/1, 397/4, 397/5, 401/1pt, 401/3pt, 401/4pt, 402/1, 402/4, 402/5, 403/4, 403/5, 405/5, 405/6, 405/7 ல் 12.18 ஏக்கர் அல்லது 530560.80 சதுர அடி பரப்பளவு கொண்ட அங்கீகரிக்கப்படாத ஜெயப்பிரியா நகர் பைபாஸ் மனைப்பிரிவில் அமைந்துள்ள 188 மனைகளை (30682 சதுர மீட்டர்) வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் – தொடர்பாக.

<u>பார்வை :</u>

1. அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3), துறை, நாள். 04.05.2017.
2. அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3), துறை, நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். R1152/2018/வி.ம, நாள். 15.10.2018.
4. பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் எண். 2511/2019 நாள். 05.08.2019.
5. மன்ற தீர்மான எண். 3586, நாள். 31.10.2019.
6. திரு. K. ரவி மற்றும் திரு. C.R. ஜெயசங்கர் என்பவரின் மனு நாள். 15.07.2019.

00000

உத்தரவு :

பார்வை 1 மற்றும் 2ல் கண்டுள்ள அரசாணையின்படி பார்வை 3ல் கண்டுள்ள விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் நடவடிக்கையில், விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விருத்தாசலம் கிராமம் ரீசர்வே எண். 308/1pt, 397/1, 397/4, 397/5, 401/1pt, 401/3pt, 401/4pt, 402/1, 402/4, 402/5, 403/4, 403/5, 405/5, 405/6, 405/7 ல் 12.18 ஏக்கர் அல்லது 530560.80 சதுர அடி பரப்பளவு கொண்ட அங்கீகரிக்கப்படாத "ஜெயப்பிரியா நகர் பைபாஸ்"மனைப்பிரிவிற்கு கொ. ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். R1152/2018/வி.ம, நாள். 15.10.2018 என்று எண்ணிட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 4ல் கண்டுள்ள தான பத்திரத்தின் மூலம் பூங்கா மற்றும் சாலை ஆகிய பொது உபயோக இடங்களை ஒப்படைப்பு செய்யப்பட்டதின் அடிப்படையில் பார்வை 5ல் கண்ட நகர மன்ற தீர்மானம் எண். 35, நாள். 31.10.2019 ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பார்வை 6ல் கண்டுள்ள திரு. K. ரவி மற்றும் திரு. C.R. ஜெயசங்கர் என்பவரின் கடிதத்தில் மனை எண்கள். 1 to 6,13 to 190,192 to 195 ஆகிய 188 மனைகளை வரன்முறைபடுத்தி ஒப்புதல் வழங்க கோரியுள்ளதை பரிசீலித்து மேற்படி 188 மனைகளின் பரப்பளவு 30682 சதுர மீட்டருக்கு வரண்முறை படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75/– வீதம் 30682 சதுர மீட்டருக்கு ரூ. 23,01,150/– அரசு கணக்கு தலைப்பிலும், வளர்ச்சி கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 150/– வீதம் ரூ. 46,02,300/– நகராட்சி கணக்கிலும் செலுத்தப்பட்டுள்ளதால் மேற்ண்ட 30682 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட <u>188 மனைகளுக்கு மட்டும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.</u>

**நிபந்தனைகள்.**

1. இந்த வரன்முறை உத்தரவு <u>**மனை எண்கள். 1 to 6,13 to 190,192 to 195**</u> **ஆகிய 188** <u>**மனைகளுக்கு மட்டுமே பொருந்தும்.**</u>
2. இந்த மனைப்பிரிவில் உள்ள இதர மனைகளின் உரிமைதாரர்கள் நகராட்சிக்கு தனியாக விண்ணப்பித்து கட்டணம் செலுத்தி மனையினை வரன்முறை படுத்திக்கொள்ளவேண்டும்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களால் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என பின்னர் அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
6. செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் மனைப்பிரிவு உரிமையாளரால் மீள செலுத்தப்படவேண்டும்.

ஆணையாளர்(பொ),
விருத்தாசலம் நகராட்சி.

இணைப்பு – ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடம்.

பெறுதல்.

1. திரு. K. ரவி,
   43/2 மேட்டு தெரு ,
   சேத்தியாத்தோப்பு,
   சிதம்பரம் வட்டம்,
   கடலூர் மாவட்டம்.

2. திரு. C.R. ஜெயசங்கர்,
   த/பெ. C. ராஜகோபாலன்,
   கடலூர் மெயின் ரோடு,
   நெய்வேலி – 607 802,
   விருத்தாச்சலம் வட்டம்,
   கடலூர் மாவட்டம்.

நகல்.

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம்– தகவலுக்காக.
2. நகரசார் ஆய்வாளர், விருத்தாசலம் நகராட்சி – சாலை மற்றும் பூங்கா பகுதியினை நகராட்சி பகுதியில் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்யும் பொருட்டு.
3. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், விருத்தாசலம் – சாலை மற்றும் பூங்கா பகுதியினை விருத்தாசலம் நகராட்சியின் பெயரில் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்யும் பொருட்டு மேலனுப்பப்படுகிறது.
4. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், விருத்தாசலம் – இவ்வுத்திரவில் கண்ட மனை எண்கள்1 to 6,13 to 190,192 to 195 ஆகிய 188 மனைகளை தவிர வேறு எந்த மனையையும் நகராட்சி உத்தரவின்றி பதிய வேண்டாம் என கேட்டுக்கொள்வதற்கு.